**செய்தி வெளியீடு எண்: 603** **நாள்: 01.09.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.9.2018) சேலம் மாவட்டம், அயோத்தியாபாட்டினம் ஊராட்சி ஒன்றியம், அனுப்பூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள அம்மா உடற்பயிற்சி கூடத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை</u>**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இங்கே வருகின்றபொழுது, கழகத்தின் சார்பாக நல்ல வரவேற்பு நல்கினார்கள். இந்த இனிய நிகழ்ச்சியிலே தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற ஒன்றிய கழகச் செயலாளர் அவர்களே, மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் முன்னாள் மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே, சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே மற்றும் கழகத்திலே பல்வேறு பொறுப்புக்களை வகிக்கின்ற நிர்வாகிகளே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.காமராஜ் அவர்களே, இந்தப் பகுதியைச் சேர்ந்த கிராமத்திலே இருக்கின்ற கழக நிர்வாகிகளே, தாய்மார்களே, விவசாயிகளே, தொழிலாளிகளே, மாணவ, மாணவிகளே, அரசு அலுவலர்களே அனைவருக்கும் பணிவான வணக்கத்தை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இந்தப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்கள் உடல் வலுவைப் பெறுவதற்கும், மூத்த குடிமக்கள், வயதானவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் உடற்பயிற்சி மிக முக்கியம். அம்மா பார்க், அம்மா ஜிம் இரண்டும் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கின்றன, நல்ல சுகாதாரத்துடன், காற்றோட்டத்துடன் இந்த அம்மா பார்க் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலே வயதானவர்கள் காலையிலும், மாலையிலும் நடைபயணம் செய்து ஆரோக்கியமான வாழ்விற்கு இந்த அம்மா பார்க்கை பயன்படுத்திக் கொள்ளலாம். அதேபோல இளைஞர்கள் உடல் வலுவைப் பெறுவதற்கும், நல்ல உடற்பயிற்சி செய்வதன் மூலமாக, ஆரோக்கியமான வாழ்வு பெறுவதற்கு, விளையாட்டிலே மேம்பாடு அடைவதற்கு தன்னுடைய உடல்வலிமையை பெருக்கிக் கொள்வதற்கு அம்மா ஜிம் கிராமத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்திலே வாழ்கின்ற சாதாரண குடும்பத்திலே பிறந்த ஏழை, எளிய மாணவ, மாணவிகள், இளைஞர்கள், பெரியோர்கள் இந்த அம்மா பார்க், அம்மா ஜிம் ஆகியவற்றை பயன்படுத்தி, அவர்களுடைய சுகாதாரமான வாழ்க்கைக்கு வழிவகை செய்கின்ற

விதத்திலே இப்படிப்பட்ட கிராமங்களிலே இன்றைக்கு அம்மா பார்க், அம்மா ஜிம் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டுகிறேன்.

நம்முடைய மாவட்டம் இன்றைக்கு ஒரு முன்னோடி மாவட்டமாக திகழக்கூடிய அளவிற்கு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. தமிழகத்திலே 32 மாவட்டங்கள் இருந்தாலும், நம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக உங்கள் முன் நிற்கின்றேன். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய நல்லாசியோடு, எல்லாம் வல்ல இறைவனுடைய ஆசியோடு, உங்களுடைய அன்போடு, ஆதரவோடு இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற பொறுப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஒரு முதலமைச்சர், ஒரு கிராமத்திற்கு வருவார் என்றால், மிக அரிது. நான் ஏற்கனவே பலமுறை இந்தப் பகுதிக்கு வந்து சென்றிருக்கின்றேன். ஏற்காடு சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரைக்கும் ஏற்காடு மலைப்பகுதியிலும், கீழே இருக்கின்ற கிராமப் பகுதிகளிலும், பேரூராட்சி பகுதிகளிலும், எல்லா இடத்திற்கும் நான் வந்து சென்றிருக்கின்றேன். நான் 2011–ல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆட்சியின்பொழுது, அம்மாவினுடைய அமைச்சரவையிலே நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்தபொழுது, இந்த சாலைகளையெல்லாம் சிறப்பாக அமைத்துக் கொடுத்திருக்கின்றேன். இங்கே வருகின்றபொழுது விவசாய சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகள் வைத்தார்கள், அதெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

கிராமப்புற மக்களுடைய வாழ்வாதாரம் முன்னுக்கு வரவேண்டும், கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்கப் பெறவேண்டும், அதுதான் அம்மாவின் அரசினுடைய லட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு என்ன அடிப்படை வசதிகள் கிடைக்கின்றதோ, அதேபோல, கடைக்கோடியில் இருக்கின்ற கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரம் சிறக்கவேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய ஆட்சியினுடைய திட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நானும் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவன், நான் ஒரு விவசாயியாக இருந்தவன், இன்றைக்கும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றேன். ஆகவே, விவசாயிகளுடைய பிரச்சினை எந்த அளவிற்கு கடினமானது என்பதை நான் உணர்ந்தவன். அதேபோல விவசாயத் தொழில் எந்த அளவிற்கு சிரமம் என்பதையும் நன்கு அறிவேன். விவசாயப் பணியில் ஈடுபட்டிருப்பது

எவ்வளவு துன்பம், கஷ்டம் என்பதையும் நான் நன்கு அறிவேன், எந்தத் துறையிலும் இவ்வளவு கஷ்டம் கிடையாது. வெயிலிலே, மழையிலே நனைந்து பணியாற்றக்கூடியவன் விவசாயத் தொழிலாளி. இரத்தத்தை வேர்வையாக மண்ணிலே சிந்தி உழைக்கின்றவன் விவசாயி. ஆகவே, அப்படி உழைக்கின்ற இறைவனால் அற்புதம் படைத்த விவசாயிகளுடைய நலன் மேம்பாடு அடைய, அந்த விவசாயிகளுக்கு அம்மாவினுடைய அரசு என்றென்றைக்கும் துணை நிற்கும், அவர்களுக்கு தேவையான திட்டங்களை வகுத்து அளிக்கும். எல்லா பகுதிகளிலும் விவசாயிகள் முன்னுக்கு வரவேண்டும், விவசாயிகள் செழிப்பாக இருந்தால், நாடு செழிப்படையும், அந்த செழிப்பான ஆட்சி அம்மாவினுடைய ஆட்சியிலே கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே, கிராமம் முன்னுக்கு வரவேண்டும், கிராமத்தில் வாழுகின்ற மக்களுக்கு என்னென்ன தேவை என்பதையறிந்து பல்வேறு திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்களின் மூலமாக கிராம பொருளாதாரம் மேம்பாடு அடைய கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான அத்தனையும் பெறவேண்டும் என்பதற்காக திட்டம், கிராமப்புற சாலை வசதி, பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏராளமான திட்டங்கள், இப்படி அளிப்பதன் மூலமாக கிராமங்கள் வளர்ச்சி பெறும், கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவிகள் உன்னத நிலையை அடையவேண்டும் என்று சொன்னால், கல்வியிலே புரட்சி, மறுமலர்ச்சியை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அதையே, அம்மா அரசு தொடர்ந்து கடைபிடித்துக் கொண்டிருக்கிறது, மாணவர்களுக்கு காலணி, விலையில்லா புத்தகம், நோட்டு, கொண்டு செல்வதற்கு பை, பள்ளிக்குச் செல்வதற்கு சைக்கிள், அறிவுபூர்வமான கல்வி கிடைப்பதற்கு மடிக்கணினி அத்தனையையும் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கிடையாது. விவசாயத்திலும் சரி, கல்வியிலும் சரி இரண்டையும் இரண்டு கண்களைப் போல் அம்மாவினுடைய அரசு காத்து நிற்கின்றது. இரண்டு துறையும் செழிக்க அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா துறைகளும் இன்றைக்கு வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. வேளாண்மைத் துறையில் இந்திய அளவிலேயே இன்றைக்கு வேளாண்மைத் துறை சிறந்து விளங்குகின்ற காரணத்தினால், இன்றைக்கு அகில இந்திய அளவிலே

வேளாண் உற்பத்தியில், உணவு தானிய உற்பத்தியில் இந்திய அளவிலே அதிக அளவு உற்பத்தி செய்து, அதற்கான தேசிய விருதைப் பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு. எல்லா துறைகளும் முன்னணி வகித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் அளிப்பது அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நம்முடைய மக்களுடைய குறைகளை போக்குவதே என் லட்சியம், அதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும். ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரம் முன்னுக்கு வர, கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு அடிப்படை தேவை வழங்க அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்று தெரிவித்து, சிறப்பான வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**